அக்டோபர் 10, 2023

# வாகன விதிமீறல் அபராதங்களைச் செலுத்தவும் அவை பற்றி எதிர்ப்பு தெரிவிக்கவும் ஆன்லைனில் செய்வதற்கான விருப்பத்தெரிவினை இப்போது நகர நிர்வாகம் வழங்குகிறது

பிராம்ப்டன், ON – வாகன விதிமீறல் அபராதங்களைச் செலுத்தவும் அவை பற்றி எதிர்ப்பு தெரிவிக்கவும் இப்போது நடைமுறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன; பிராம்ப்டன் நகரின் நிர்வாகத்தின் அபராதம் விதிக்கும் அமைப்பு {City of Brampton's Administrative Penalty System (APS)} இதனைச் செய்துள்ளது. இந்த ஆன்லைன் APS தளம் அக்டோபர் 16, 2023 தேதியன்று நடைமுறைக்கு வருகின்றது.

APS என்பது பணம் செலுத்துதல், மறுபரிசீலனை செய்தல் மற்றும் வாகன நிறுத்தம் மற்றும் பிற துணைச் சட்டம் சார்ந்த அபராதங்களைச் வசூலிப்பதற்கான வேகமான மற்றும் நெகிழ்வான அமைப்பாகும். இது அமலாக்கச் செயல்முறையை நெறிப்படுத்தவும், நியாயமான, பயனுள்ள மற்றும் திறமையான முறையில் பிராம்ப்டன் நகரத்தின் உப சட்டங்களுக்கு அதிக இணக்கமாக இருக்கவும் என வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த அமலாக்கச் சட்டத்தின் மூலம், அபராதங்களை உறுதிப்படுத்தவோ, குறைக்கவோ அல்லது ரத்துசெய்யவோ, சுயசார்பான மறு பரிசீலனை மற்றும் செவிமடுப்பு மறுஆய்வு அதிகாரிகளைப் பயன்படுத்தி, சட்டப்பூர்வ சர்ச்சைகள் நீதிமன்றங்களில் இருந்து நகராட்சி நிர்வாகத்திற்கு மாற்றப்படும்.

**அபராதங்கள் விதிக்கும் செயல்முறை பற்றி:**

அபராத அறிவிப்பு பெறும் நபர்கள்:

- அபராத அறிவிப்பில் உள்ளபடி தொகையைச் செலுத்தலாம்; அல்லது
- மறுபரிசீலனை அதிகாரி மூலம் பரிசீலிப்புக்கு உட்படுத்தலாம்

மறுபரிசீலனைகளை இப்போது ஆன்லைனில் எழுத்துப்பூர்வ சமர்ப்பிப்பின் மூலம் நிவர்த்தி செய்ய முடியும், இது அபராதத்தை உறுதிப்படுத்த, குறைக்க அல்லது ரத்து செய்யும் அதிகாரம் கொண்ட மறுபரிசீலனை அதிகாரியால் மதிப்பாய்வு செய்யப்பட்டு முடித்து வைக்கப்படும்.

மறுபரிசீலனை அதிகாரியின் முடிவுக்கு தனிநபர்கள் உடன்படவில்லை என்றால், அவர்கள் முடிவெடுத்த 15 நாட்களுக்குப் பிறகு மறுஆய்வு விசாரணை சந்திப்புக்காக வேண்டிக்கொள்ளலாம். ஆன்லைன் மெய்நிகர் தளத்தைப் பயன்படுத்தி விசாரணை மறுபரிசீலனைகள் நடத்தப்படும்.

மறுஆய்வு விசாரணை சந்திப்பினைத் தொடர்ந்து கொடுக்கப்படும் மறுபரிசீலனை அதிகாரியின் முடிவே இறுதியானதாகும்.

**லின்குகள்:**

மேலும் அதிகம் தெரிந்துகொள்ள, அல்லது விதிமீறல் அபராதங்களைச் செலுத்த, மற்றும் அவை பற்றி எதிர்ப்பு தெரிவிக்க வருகை தாருங்கள்:
www.brampton.ca/courtservices

-30-

**ஊடகத் தொடர்பு**
பிராம்ப்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca